

கரூரைச் சேர்ந்த 5 வயது சிறுமி மாதங்கிஸ்ரீ, ஸ்கேட்டிங்கில் புதிய உலக சாதனைக்காக, நெடுஞ்சாலையில் 20 கிலோமீட்டர் தூரத்தை 1 மணி நேரம் 1 விநாடி நேரத்தில் கடந்து சாதனை படைத்துள்ளார். அவருக்கு கரூர் மாவட்ட கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி பாராட்டு தெரிவித்து பரிசு வழங்கினார்.



அரியலூர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள ரிதன்யா மஹாலில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் முனைவர் சபாபதி மோகன், ஏ.கே.அருண், கலா சுந்தரமூர்த்தி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள், கழக தொழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### 2024 - 25 ஆம் கல்வியாண்டிற்கான பொதுத் தேர்வு எழுதவுள்ள

# மாணவர்கள் - தேர்வர்கள் தங்களது ஐயங்களை தீர்க்க தேர்வுக் கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொள்ளலாம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



சென்னை, மார்ச் 3-

2024-25-ஆம் கல்வி யாண்டிற்கான பொதுத் தேர்வு எழுதவுள்ள 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வினை 8,21,057 தேர்வர்களும், 11-ஆம் வகுப்பு பொதுத்தேர் வினை 8,23,261 தேர்வர்க ளும், மற்றும் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வினை 9,13,036 தேர்வர்களும் தேர் வெழுதவுள்ளனர். மாண வர்கள்/தேர்வர்கள்/பொது மக்கள் தங்களது புகார்கள், கருத்துக்கள் மற்றும் ஐயங் களை தேர்வுக் கட்டுப் பாட்டு அறை - தொடர்பு எண்கள் 9498383075 / 9498383076 தெரிவித்து பயன்பெறுமாறு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி கேட்டுக்கொண் டுள்ளார்.

2024-25-ஆம் கல்வி யாண்டிற்கான மார்ச்/ஏப் ரல் - 2025 பொதுத் தேர்வு கள் மேல்நிலை இரண்டாம் ஆண்டிற்கு 03.03.2025 முதல் 25.03.2025 வரையும், மேல்நிலை முதலாம் ஆண் டிற்கு 05.03.2025 முதல் 27.03.2025 வரையும், பத் தாம் வகுப்பிற்கு 28.03.2025 முதல் 15.04.2025 வரையும் நடைபெறவுள்ளது.

பொதுத்தேர்வுகளை சிறப்பாக நடத்திட கண்கா ணிப்பு அலுவலர்கள் , ஆய்வு அலுவலர்கள் மற்றும் அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர்களுக்கான மாநில அளவில் கூட்டம் 13.02.2025 அன்று நடத்தப் பட்டு அறிவுரைகள் வழங் கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்வுகளை கண்காணிப்பதற்காக கண் காணிப்பு அலுவலர்கள் தங் களுக்கு ஒதுக்கீடு செய்யப்ப ட்டுள்ள மாவட்டத்திற்கு சென்று தேர்விற்கு முந் தைய ஏற்பாடுகள் அனைத் தையும் பார்வையிட்டு உறுதி செய்துள்ளனர்.

மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டத் தேர்வுக்குழு அமைக்கப் பட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தி அக்கூட் டத்தில் தடையில்லா மின் சாரம் வழங்கிட மின்சாரத் துறைக்கும் தேர்வுப்பணிக ளுக்கு பாதுகாப்பு வழங் கிட காவல்துறைக்கும் தேர் வுமையங்களில் போதுமான அடிப்படை வசதிகள் செய்து தர உள்ளாட்சி அமைப்புகளுக்கு முன்னேற் பாடுகள் குறித்து அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேல்நிலை இரண்டாம் ஆண்டுப் பொதுத்தேர் வினை 8,21,057 தேர்வர்க ளும், மேல்நிலை முதலாம் ஆண்டுப் பொதுத்தேர் வினை 8,23,261 தேர்வர்க ளும் மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வினை 9,13,036 தேர்வர்களும் தேர் வெழுதவுள்ளனர்.

மேல்நிலை இரண்டா மாண்டிற்கு 3,316 தேர்வு மையங்களிலும் மேல்நிலை முதலாமாண்டிற்கு 3,316 தேர்வு மையங்களிலும் பத் தாம் வகுப்பிற்கு 4,113 தேர்வு மையங்களிலுமாக மொத்தம் 25,57,354 தேர் வர்கள் 2024-25-ஆம் ஆண்டிற்கான பொதுத் தேர்வினை எழுதவுள் ளனர்.

இத்தேர்வுப் பணி யில் ஒவ்வொரு தேர்வு நாளன்றும் சுமார் 45,000 க்கும் மேற் பட்ட ஆசிரியர்கள் ஈடு படுத்தப்படுவார்கள். மேலும் தேர்வு முறை கேடுகளை தடுக்க சுமார் 4800 க்கும் மேற் பட்ட பறக்கும் படை யினர் தேர்வுப்பணி யில் ஈடுபடுத்தப்படு வார்கள்.

மேல்நிலை முதலா மாண்டு, இரண்டா மாண்டு மற்றும் பத் தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் 20,476 மாற்றுத்திறனாளி தேர் வர்களுக்கு மொழிப் பாட விலக்கு, சொல் வதை எழுதுபவர், தேர்வெழுத கூடுதல் ஒரு மணி நேரம் போன்ற சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள்/தேர் வர்கள்/பொதுமக்கள் தங்களது புகார்கள், கருத்துக்கள் மற்றும் ஐயங்களை தெரிவித்து பயன்பெற வசதியாக அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் முழுநே ரத் தேர்வுக் கட்டுப் பாட்டு அறை அமைக் கப்பட்டுள்ளது. தேர்வு நாட்களில் ஒவ்வொரு நாளும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இக்கட்டுப் பாட்டு அறை செயல் படும் எனத் தெரிவிக் கப்படுகிறது.

தேர்வுக் கட்டுப் பாட்டு அறை - தொடர்பு எண்கள் 9498383075 / 9498383076

அலைபேசி தடை:-

தேர்வு மைய வளா கத்திற்குள் அலைபே சியை எடுத்து வருதல் முற்றிலும் தடை செய் யப்பட்டுள்ளது. அத்து டன் தேர்வு பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் தேர்வறையில் தங்களு டன் அலைபே சியை வைத்திருப்பதற்கு தடை விதிக்கப்பட் டுள்ளது.

இவ்வறிவுரையை மீறி தேர்வர்களோ அல் லது ஆசிரியர்களோ அலைபேசி/இதர தக வல் தொடர்பு சாதனங் களை வைத்திருப்ப தாக கண்டறியப் பட்டால் கடுமையான நட வடிக்கை மேற்கொள்ளப் படும்.

ஒழுங்கீனச் செயல்பாடு கள்:-

தேர்வு நேரங்களில் தேர் வர்கள் ஒழுங்கீனச் செயல்க ளில் ஈடுபட்டால் குற்றங்க ளுக்கு தக்கவாறு தண்டனை கள் வழங்கப்படும். மேலும் ஒழுங்கீனச் செயல்களுக்கு உடந்தையாகவோ / ஊக் கப்படுத்தவோ பள்ளி நிர் வாகம் முயலுமே யானால் பள்ளித் தேர்வு மையத் தினை இரத்து செய்தும், பள்ளி அங்கீகாரத்தினை இரத்து செய்திட பள்ளிக் கல்வி/தனியார் பள்ளிகள் இயக்குநருக்குப் பரிந்து ரை செய்தும் கடுமையான நட வடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

